ஸ்ரீ

அரியக்குடி

மும்மணிக்கோவை

இஃது

அரியக்குடி ஸ்ரீமாந்

சா. கி. அரங்கநாதச் செட்டியார்

அவர்களால் இயற்றப்பெற்று

ஷையார் குமாரர்

சா. கி. ரெ. இலக்குமணச்செட்டியாரால்

மதுரை விவேகபாநு அச்சியந்திரசாலையில்

பதிப்பிடப்பெற்றது.

1910

ஸ்ரீ

அரியக்குடி

மும்மணிக்கோவை

இஃது

அரியக்குடி ஸ்ரீமாந்.

சா. கி. அரங்கநாதச் செட்டியார்

அவர்களால் இயற்றப்பெற்று

ஷையவர் குமாரர்

சா. கி. செ. இலக்குமணச்செட்டியாரால்

மதுரை விவேகபாநு அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

1910

சிறப்புப்பாயிரம்.

மதுரைத் தமிழ்ச்சங்கம்

“செந்தமிழ்” பத்திராசிரியர்

ஸ்ரீமத். மு. இராகவையங்கார்

அவர்கள் இயற்றியது.

இம்மணிக் கோவைக் கிணையிலையென் றேந்திழையை
மும்மணிக் கோவை மொழிந்தனனால்—மைம்மணிநேர்
நன்னரங்க மால்பதத்து நாத்தழும்பத் தோத்திரங்கள்
பன்னரங்க நாதகவிப் பன்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜயம்.

அரியக்குடி

மும்மணிக்கோவை.

ஆழ்வார்கள் துதி.

சீராரும் பொய்கைப் பிரான்முத லாகத் திகழுநன்மை
யீரா றெனுமென் னுடையார் திருநண்ப ரேய்மகமே
யோராறு பேத சமயங்கண் மேலென் றுருப்பநற்
கூறாரு மார்ப ரடித்தா மரையுளந் தாங்கினனே.

நம்மாழ்வார் துதி.

திருக்குரு கூர மிளிர்மணி சேருநீரச் சீர்க்கருங்க
திருக்குரு கூரன் புடையான் பராங்குசன் றோர்வருமா

திருக்குருகூர மரும்வா ளடைந்தவர் தீவினைக்குத்
திருக்குருகூரன் செழுமலர்ப் பாதமென் சிந்தையதே.

எதிபதி துதி.

ஆசான்பான்மந்திரத்தினர்த்தங்கொண்டெங்கெவர்க்கும்
பேசாயெனவுமன்பாற்பேசினான்—மாசில்புகழ்ப்
பண்டைமறைக்கன்றுரைத்தபாடியத்தான்மால்சமயங்
கண்டுநிலை யிட்டபிரான் காப்பு.

வேதாந்ததேசிகன் றுதி.

செம்மணி நீல நிறத்தன் னரியையுஞ் சீதரற்கு, மும்மணிக் கோவையைக் கோத்தணி வானருண் முற்றிநின்று, வெம்மணி மேல்வரும் போற்றுறு வேங்கடத் தெந்தைதக்கமர், கைம்மணி தன்னுரு வாய்த்தாய்மில் வந்தநற் காரணனே.

நூல்.

ஆசிரியப்பா.

சீர்பெறு முத்தியிற் றிணைசமா முகனெனப்
பேர்பெறு கடவுளைப் பெற்றிவ் வுலகிற்
பற்பல யோனிகள் படைத்தளித் தழிக்கு
மற்புத விளையாட் டவையுடை மாதவ
வன்னவை யுயர்விழி வனைகதோற் றத்த
னென்னினு மியான்முன் னியற்றிய தவத்தால்
வேலா வலய மேதினி யதனுண்
மேலாம் பதியாய் விரும்பதிற் குரித்தாய்த்
தேனதி தென்பாற் றிகழுமா வரியை
மாநக ரத்து மானுடப் பிறவி
தனில்வந் துதித்துநின் சந்நிதி வலம்வந்
தனுதினந் தொழவு மமைத்தன னிச்செயல்
வழுவா திருக்கு மதியே
தழுவா வுறவரு டால்வேண் டினனே. (1)

வெண்பா.

இனனே நிகராழி யெம்பிரா னரிமை
யினனே பிரான்மற் றிலையாற்—றினயிதுகொண்
டோதி மனனேக யோக முதும்பிறப்பைக்
காதி மனனே களி. (2)

கட்டளைக்கலித்துறை.

களித்த வருக்கருள் வான்கட லூன்னாங் கடக்கில
ங்கை, யொளித்த வருக்களை மேவச்செய் தாய்க்கரு
போமெமைமயல், வளித்த வருக்க மலரம்பு கூடி யகம்
வருத்தா, விளித்த வருக்கத் துயர்போக் கரியாக்கன்
மேவுறவே. (௩)

ஆசிரியப்பா.

உறைபவ னெல்லா வுயிர்தொறு மெங்குறு
நின்றபவன் வேங்கட நின்றவக் தரியை
மேயினன் மாறுட விரைக்கால் கேண்மின்
போயவன் மலரடி புனைபூடக் தலைமிசைப்
போற்றமி னின்னும் புலன்றிப் பிறைவிரே

லாற்றிய கன்ம வனுபவம் வியந்தழித்
தக்கிணாக் கிழவன்போ லக்கண நம்முட்ற்
பெருக்கண மதனைப் போடல் மென்பிரோ
வல்லதூஉ மவனை யரைக்கணும் பொறுத்தி
கல்லெய் மெல்லியல் காட்டிஞற் றெழுவமென்
றுரைப்பினு நம்முரை யொன்று மனக்கொளான்
றரைத்தலை சற்றுந் தாபுமர் புரியா
ஞதலா லின்னே யச்சுத னடிகீள்
காதலாற் போற்றுங் கருத்துடை யிரேற்
றிகைமா முகனுந் தென்றிசைக் கோனு
மிகையார் தமதொழி லியற்றிய சிறிது
மென்னே பயன்பின் னியைவது
பொன்புணர் மார்பற் பொருந்துத முனே. (4)

வெண்பா.

கானத் திருவினைத்துந் தாழ்கடலிற் புக்குழித்தந்
தானத் தறைவைத்த தண்ணளியான்—ஞானத்து
மல்லா ரரிவைபகர் மன்னுதியே னன்னெஞ்சே
செல்லா வினையுளலோ செப்பு. (5)

கட்டளைக்கலித்துறை.

செப்பே நிகருந் தனமும் பணமுநற் செவ்விதழு
மைப்போ தனைய விழியு முடைய மடவியர்க்கே
யெப்போது மன்பினனென் றேநமன் றமரென்னைப்பற்று
மப்போ தடைக்கலங் காணரி யக்குடி யச்சுதனே. (6)

ஆசிரியப்பா.

அச்சுத மாதவ வமல நிராமய
நச்சர விற்றுயி னாயக நாரண
மாநக ரிவைய் மன்னுமா மணாள
சீநி வாசச் சீரபி தானநின்
னருமங் களருண மளப்பில கிடப்ப
வருளை நினைந்தன னாவா வதிசயங்
காகா சுரனாக் கன்மனப் பாதக
னாகா தனசெய் தடைதரச் சரணக்
காத்தனை யென்பது கருதிப் பற்பல
காத்தவ றுடைய நாயினுங் கடையே
னீத்தவை யோம்பலி னித்தனைக் கிடனெனப்
பார்த்தவர் வெறுக்கும் பாதக வெளியேன்

பொற்றிரு மலரிற் பொறியோ
டுற்றநிற் சரணம் பற்றினன் றுறவே. (7)

வெண்பா.

உறவும் பொருளுமற் றற்றனவுஞ் செய்ய
திறமா தினனுப் பிணயி—னறமனனே
யெல்லாமு மாகு மெழிலா ரரியைநகர்
வல்லானே சேடனருள் வான். (8)

கட்டளைக்கலித்துறை.

வானின் மதித்தனை நேர்முக மாதர் வலையுட்சிக்க
நீனின் றலைவை யனைவயுனைத் தீய நிரயத்துய்க்குந்
தேனின் றனிமுர ருமக்கு முாயினன் சீரரியை [திடேய.
தானின் றனனருள் வான்கண்டு கொண்டினித் தாழ்ம

ஆசிரியப்பா.

எதமின் மனதகி னிருந்தவர் தாமும்
மோதியிற் காண வுடலம் வருந்தியுஞ்
சருகொடு புனல்கால் பருகினயர் தழற்கண்

மருவியுங் காண்டற் கரியவெம் மடிகளைக்
காணல்பிக் கெளிதாங் கடிபொழி லரியையில்
வேணவா வினையா விரைந்துசெல் லுதியே
லென்னே பகர்வலென் மனனே
முன்னைய வினையெலா முற்று மாற்றலவே. (10)

வெண்பா.

தவர்வளைத்து மாதுகொளாத் தண்மதிலைக் கோமா
தவரழைக்கச் சென்றதிருத் தாளுங் — தூயவளைச்
செங்கரமு நீண்முடியுஞ் சீரியைய நின்றதுமே
யெங்கெங்குங் காண்பதியா னென்று. (11)

கட்டளைக்கலித்துறை.

எரியரி யம்பர மப்பொதி மன்னினான் றியக்குருவாய்
விரியரி யந்தணர் மந்திரம் வேதம் விளங்கவரு
கரியரி யந்தண் மலர்த்தேன் களித்தண் கழனிகள்சூழ்
புரியரி யக்குடி மேவினன் காலிணைங்கள் புண்ணியனே.

ஆசிரியப்பா.

புண்ணிய பாவப் பொருவிலங் கிரண்டுங்
கண்ணிக் களைகளைக் கருதல ராகி

மாலலாற் கதிதான் மற்றிலை யென்றைச்
சால வறிந்தவன் றண்டா மறைநிகர்
பொற்றிரு வடிக்கே புகல்புகும் பெரியோ
ருற்றுழை யுறைபு ஞெயரிய வானிற்
சென்றவர் சேர்த்திபோ னின்றுநின் றிமைக்கு
மரிறையமா நகர்மே வச்சுத சரணம்
விரியு முலகம் விளிதரு காலம்
வயிற்றிடைக் கொள்ளு மாதவ சரணம்
பயிற்று நின்றுணை பாரா யணபர
வடியார் குழாங்க ளனைகமுண் டெனினும்
கொடியே னைய குணமிலேன் றனைபு
மாங்கவர் கட்டுற வாக்கி
லோக்குநின் கருணைத் துயர்வுமிக் காமே. (13)

வெண்பா

ஆமெய்க்குங் காலத் தயன்மறைத்த கன்றுகிருர்
தாமெய்த்தக் கவ்வருவுந் தானேயா—மாமோக
மாலையனை கோதைதருமுன் மாலையனை நீளரிவை
யாலையனை யேத்த லரண். (14)

கட்டளைக்கலித்துறை.

ஆரணாக வந்தனை யைவரிக் காவரி யக்குடியாய்
முரணாக வந்தனிற் றெருநர்க்கு மன்னரை முற் றவித்தாய்
புரணாக வந்தங் கொடியா னெடுகொல்லைப் பூங்கொடி செய்
சரணாக வந்தனைச் செற்றாய் வினையன் றிச் சார்பிலனே.

ஆசிரியப்பா.

இலன்போன் மாவலி யிடமண் ணேற்றனை
நலன்சே ரரியை நகருறை மாயோய்
மூனைசுதர் பொன்பூ மற்றுள வெல்லாங்
கனவியற் பொருளெனக் கண்ணுற் றிருப்பவும்
விருப்பு வெறுப்பு விளையா தெவற்றையு
மொருப்பட நினைப்பவு முலையாப் புலன்கள்
முற்று மடக்கி முதிர்தரு நிலையிற்
சுற்றும் பிறழாத் தனித்தங் குறைநர்க்கு
தாரணை தியானத் தனைமுனஞ் செய்தப்
பூரண சமாதி பொருந்தவு மிந்த
ஞாலத் தறிவை நாமற மறக்கவுங்
காலத்தை நீளத் தலத்துற வேற்றி

பழுது பான மனுதினந் தொளவுங்
குமுத சகாயன் கூட்டுற வொழியா
வாதித்த வியக்கத் தகலா தமர்ந்து
வாதித்த தாகு மனோலய மேவவு
மறிவிற் கறிவை யறியு
நெறியின் வழுவா திற்கவு மருளே. (16)

வெண்பா.

அருச்சுனர்க்குக் கீதை யறைந்தானை யணையா
மருக்கனத்தை விருத்தி யளித்தானின் — பெருத்தபுவி
பூத்தானைத் தானவனைப் பூந்துளவனைப் பொன்னிரை
மாத்தானைத் தானவனை வாழ்த்து. (17)

கட்டளைக்கலித்துறை.

வானவ ரம்பர நின்றரி யைப்பதி வந்துதொழாத்
தானவ ரம்பல வேண்டிவர் நீயிங்குத் தானுவந்தே
யானவ ரம்பல செல்வத்தை யீதி யவரெமைப்போன்
மானவ ரம்பர வாகிலுற்று மதித்திடினே. (18)

ஆசிரியப்பா.

மதியந் திரியா மந்தர மத்தா
வதிகளி வாசுகி யடைகயி றாக
வானவர் தானவர் வருந்தினர் வலிப்பத்
தாமொரு கமடமாய்த் தாங்கிய தோடு
சொற்பெறு பாற்கட றுளங்கக் கடையா
வருமா வமுதினை வாங்கிமா மோக
வொருமா துருவுகொண் டுண்மையின் விபுதா
பெறுமா றளித்த பெற்றியன் முன்னர்
நறுமா மலர்ப்பொழி னண்ணிய வேங்கட
நின்றரி யைப்பதி நேர்ந்தது கேண்மோ
நலத்தகை வணிக குலத்தினோர் வள்ளல்
பூவக மகிழுஞ் சேவகப் பெயரோன்
வேங்கட மால்சரண் டாங்கட னாம
லாண்டுதோ றடைந்து காண்டக வல்லான்
விண்ணென [illegible] மொய்ந்தவத் தனுதினங்
கண்டுறு பவிக்குங் காட்சிய னன்னாட்
பூதுவைப் பூசனைச் சாதனை யாளன்
றன்பால் வருகுநர்க் கன்பா லவர்தங்

தன்பா லினைவெலாந் துழாய்ப்புன லருளி
யொட்டியும் வெஃகுவ நீட்டியு முலகங்
காக்குமா லடிமை யாக்கின னுமைநாட்
கருமலை யப்புரி திருமலை யப்பனு
நற்றவ மேவிய நன்பற் கோருரை
சொற்றன னீழப் புத்தனை யுதனு
லங்கநோர் திவண்வரல் பாங்கநின் னகர்வா
யங்கனை யலர்மேன் மங்கைத் தெடும்வரைத்
தணிந்தன னிபொற் பணிந்தவர் தளியைச்
சமையமென் றிடமொன் றமைவுறப் புகலாத்
தீர்த்தனு மவ்வயின் சார்த்தமுங் குறியுங்
கூட்டிய வன்பாற் காட்டின னதவ
வுடையா னவனரு ளுடையேற் கென்னுரு
வென்று மறிவின ணெம்பெரு மாற்கு
மன்னுபொற் கோவின் மாமதிற் கோபுர
மண்டப முதலா மரபிற் புரிந்து
மண்டர்நா யகனங் கமைதர லைக்கா
வணிவிழா முதல வடைவி னியற்றியும்
பணிபிறி தொரீஇயவர்ப் பணிதலே யுடைமையிற்
பூவல யத்திற் பொருந்தின ரியாருஞ்

சேவக னுமஞ் சிறப்புடைத் திவற்கென
வதியா வவணளி பதியாவு குந்தப்
பதியே னெனென் பண்ணினவ் றவமே
யித்தகை யருள்செ யெம்மான்
வித்தகற் காட்செய வேண்டுமா லினியே. (19)

வெண்பா.

இனிவல் வினைகா ளெனையணுகல் கூடா
கனிவிளவிற் கன்றெறிந்த கண்ணன் — றனியரிவை
யூரினன் கங்கைவந்த வொண்பதத்தான் றண்டுளவத்
தாரினு னாய தால். (20)

கட்டளைக்கலித்துறை.

தானத் த[illegible]ரிணுக் கீந்தனை தன்னரிவைத்
தானத் தவத்த வரவின் றலைநடி தாளிணைகள்
ஞானத் தவத்தரும் போற்றுவ தாகிக் கானினிப் போய்ப்
பானத் தவத்த பணிவேறென் கண்டு பணிவதற்கே.

ஆசிரியப்பா.

பணிமுடி சுமக்கும் பார்மிசைப் பகரு
மணிகொள் பதிக ளனைத்திலும் விருப்பா
[illegible] திகரி லரியைப்
பொற்பதி மேவிய பொன்னுறை மார்ப
வொப்புயர் வின்றி யோங்குமாழ் வார்க
டிப்பிய கவியாந் திருவாய் மொழிநற்
றிருமொழி மாலை சிறிய திருமட
றிருவந் தாதி திகழு மின்னன
சீர்த்திகொள் பாக்கட் சார்த்திய திருச்செவி
யார்த்திகொண் டெ[illegible]ய வறிவில னுரைக்கும்
பாவையு முவந்தருள் பாலிக்குங் கொல்லெனு
மாலைய மென்னுளம் வந்துந் தெருண்டன
னெத்திற மென்னி வியம்புவ னின்பாற்
பற்றொருன் றடையமேற் பரிந்[illegible] செயலலா
லன்னவ ருயர்வு மவருரைச் சீரு
மின்னன வென்னு மியல்புள வினையாய்
நம்மவ னென்னு நண்பே
செம்மையிற் சேருளச் செல்வினைக் கண்டே (22)

வெண்பா.

கண்டே யறிவொடுநற் கன்றுமிழுந் தாளையுங்
கொண்டேகி னுனின்னுங் கூடுமே—தெண்டிரைப்பூ
மாதவனை வேதமற வர்தவனைச் சீரிலைய
மாதவனை வீதி வர. (23)

கட்டளைக் கலித்துறை.

வந்தனை தம்பத் தொருவனுக் காவுரு மாவரியாய் [நிற்
முந்தனை தனனுணர கொண்டுறைந் தாய்வனமுந் தினை
சிந்தனை தந்த தந்திக்கரியக்குடிச்செல்வவின்றென
பந்தனை தந்தன வாய்விட வந்து பரவினனே. ()

ஆசிரியப்பா.

பரந்தரு வினைக்கட படிந்தவ ரேனும்
வரந்தரு மெனனுழை வந்தமிழ் துவிசேன்
மன்னிய கன்ம வயப்படா வொழித்துத்
துன்னிரு மெற்பதந் தய்க்குமா றுமக்கு
மாங்கவ னுருவ மளிக்குவன் காண்மி

னீங்கிது திண்ண மெனும்பரி சிலகச்
சங்கமு சேகியுந் தாங்குபு தழங்கும்
புங்கமெய் சுவாமி புட்க ரிணியும்
புள்ளொலி நீங்காப் பொழிலு மலரிழி
கள்ளுறாச சாலி வளர்தரு கழனியும்
பாம்பிடைக் காந்தும் பன்மணிக் குழாத்தி
னிரம்பு மொளியும் வயின்வயி னிலவி
யித்தகை வளம்மே வெழில்கொ ளரியை
வித்தக நின்னுழை வேண்டுதல் கேண்மியா
பந்தங் கொடுபற் பலபயில்
சிந்தையை யடக்குமோர் தந்திரச் செயலே. (25)

வெண்பா.

செபவுரியை நீநான் செயற்கிலக்க னென்று
மயலறுநல் லெண்ணம் வரற்கே—கயலுருவாய்
வேதங் கொணர்ந்தளித்த வேங்கடவ மேவரியை
மாதங்க யான்போற்று வல்.   (26)

கட்டளைக்கலித்துறை.

வல்ல வரக்கனை திரைந்த மாமுடி வாங்கிவிடு
வில்ல வரக்கனை தாங்கிய நாயக யேவரிபூ
ரில்ல வரக்கனை பூமகள் கேள்வ வெழிற்குறைப்பாற்
செல்ல வரக்கனை வேல்விழி யார்மய றீர்த்தருளே.()

ஆசிரியப்பா.

தீர்த்தனை வினையெலாந் தீர்த்தனை போலரு
ளரிவையமா கரி னரிவையமா பவனைக்
கண்ணனைக் கமலக் கண்ணனைக் காயா
வண்ணனைப் பரதனவ் வண்ண[illegible]மாகோ
பாலனைத் தேவகி பாலனைப் ப[illegible]
காலனைச் சகடுதை காலனைச் ச[illegible]ய
மாறனுர் வெருவ[illegible]சொல்லுனை
செவியனைக் காரிற் செவியனைச் சங்கஞ்
சக்கரம் பகையஞ் சக்கரந் தாங்குபட்
கொடியனைத் தீயோர் கொடியனை நெடிது

போற்றினீர் பத்திமைபோற் றினையேல்
வீட்டுவை குறவீர் வீட்டுவை மளிப. (28)

வெண்பா

மந்திரமூ நான்கு மறைமுடிவு மாறனார்
தந்தருளி யக்குடிகொ டானமா முந்தரியை
மாநகரி யான்சீநி வாசப்பே ராளழைத்த
நாககிரி யானருண்மி தந்து. (29)

கட்டளைக்கலித்துறை

தந்தித்து வந்தனை நீக்க முனைமதன் றன்னுளை
யாற்பந்தித்து வந்தனைச் சீரா ரரியைப் பதிவிருப்பாற்,
சந்தித்து வந்தனை யெல்லா மருளடித் தாமரைகள்; சிந்
தித்து வந்தனை செய்தலைப் பேணின்னின் சீர்த்தி
யையே. (30)

முற்றும்.

11998